# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, வைகாசி - 28 வெள்ளி 11.06.2021 மலர் - 2, இதழ் - 66


## சேவைத்துளிகள்

கரூர் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக கரூரில் உள்ள அனன்யா ஆர்த்தோ மருத்துவமனைக்கு ஆக்ஸிஜன் செறிவூட்டும் கருவி அங்குள்ள நோயாளிகளின் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்கப்பட்டது.





திருச்சி மாவட்டம் கீழக்குறிச்சி பகுதியில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதியுடன் ரோட்டரி சக்தி திருச்சிராப்பள்ளி மாவட்டம் இணைந்து அங்குள்ள தூய்மைணியாளர்களுக்கு கையுறை, துவைத்து பயன்படுத்தத்தக்க கையுறைகள், முகக் கவசம் , சானிடேசர் மற்றும் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது. மேலும், அங்கு கல்வி தான மையத்தில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் திவ்யா அவர்களிடம் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி மற்றும் நீலகிரி சேவாகேந்திரம் சார்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் பகுதியில், ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக இலவச உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.



கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி மற்றும் பிரகதி சேவா அறக்கட்டளை சார்பாக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் தகவல் உதவி மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.






வடசென்னை இந்து முன்னணி சார்பில் 25,000 பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்பட்டது.

நெடுங்குன்றம் ஊராட்சி கொளப்பாக்கம் கிராமத்தில் ஆர்.எஸ்.எஸ் சார்பில் 500 நபர்களுக்கு கபசுரக் குடிநீர், முகக்கவசங்கள், ஆர்சனிக் ஆல்பம் ஹோமியோபதி மருந்துகள் வழங்கப்பட்டது.






சக்ஷம் அமைப்பும் ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை போர்ட் சிட்டியும் இணைந்து சென்னை பகுதியை சார்ந்த 10 மாற்று உலா பைக் டாக்சி மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கின.

ஸ்ரீ மீனாட்சி குரூப்ஸ் நிறுவனத்தின் சார்பில் அதன் உரிமையாளர்களான திரு.மனோகர் சிங் & திரு.ஹரி சிங் ஆகியோர் சேவாபாரதியின் கோவிட் கேர் சென்டருக்கு எழுதுபொருட்கள், ஃபைல் உள்ளிட்ட ஸ்டேசனரீஸ் பொருட்களை அவர்கள் சார்பாக இலவசமாக வழங்கினர்.







திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சன் மேரி டிரஸ்ட் நிறுவனர் திரு. இண்ணோசண்ட் அவர்களின் பங்களிப்பில் ரூ. 2,50,000 மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் வழங்கபட்டது பின்பு சேவாபாரதி அமைப்பு மூலமாக பொதுமக்களுக்கு கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

# உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு வரவேற்பு



சென்னை உயர் நீதிமன்றம், கோயில்கள், மற்றும் புராதான சின்னங்கள் பாதுகாக்க ஒரு திருப்புமுனை தீர்ப்பை வழங்கியுள்ளதை வரவேற்றுள்ள பா.ஜ.க தலைவர் எல்.முருகன், தன் அறிக்கையில், 'நினைவுச் சின்னங்கள் அனைத்தையும் பாதுகாக்க மேலாண்மை ஆணையத்தை அமைக்க வேண்டும். அக்குழுவில் இடம் பெறுவோர் குறித்த வழிகாட்டுதல்கள். அக்குழுவின் ஒப்புதல் பெற்றே கோயில்களில் எந்த பணியும் மேற்கொள்ள வேண்டும். பாரம்பரியக் கோயில்கள் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க நடைமுறைகள் கையேட்டை அரசு இறுதி செய்தல். தொல்லியல் துறை, பழமையான கோயில்களை ஆய்வு செய்து சேதத்தை மதிப்பிட வேண்டும். விவரங்களை இணையதளத்தில் வெளியிட வேண்டும். கோயில் நிதியை, கோயில் பராமரிப்பு, விழாக்கள், ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். உபரித்தொகையை மற்ற கோயில்கள் பராமரிப்புக்குப் பயன்படுதலாம். கோயில் நிலங்களை அரசோ அல்லது அறநிலையத்துறையோ தானம் வழங்கியவர்களின் விருப்பத்திற்கு மாறாக விற்கவோ, கொடுக்கவோ கூடாது. கோயில் நிலங்களில் பொதுநோக்கம் என்ற அம்சம் கூடாது. குத்தகை, வாடகை பாக்கி வைத்திருப்பவர்களின் பட்டியலை இணையதளத்தில் வெளியிட வேண்டும். அவர்களை வெளியேற்றவும், பாக்கியை வசூலிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கோயில் சிலைகளை கணக்கெடுத்து அவற்றைப் புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்த வேண்டும். திருடப்பட்ட சிலைகள் குறித்த விவரங்களை இணையதளங்களில் வெளியிட வேண்டும். அரசு ஊழியருக்கு இணையாக அர்ச்சகர்கள், ஓதுவார்கள் உள்ளிட்ட கோயில் ஊழியர்கள் அனைவருக்குமான ஊதியத்தைக் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ள அனைத்தையும் தமிழக அரசு உடனடியாக செயல்படுத்த முன்வர வேண்டும்' என கேட்டுக்கொண்டுள்ளார்.

# மாற்றப்படுகிறதா தலைமை செயலகம்



அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், 'தற்போது கிண்டியிலுள்ள கிங் ஆய்வக வளாகத்தில் 250 கோடி ரூபாய் செலவில் பல்நோக்கு மருத்துவமனை அமைக்கப்படும் என முதல்வர் அறிவித்து, சுகாதாரத்துறை அமைச்சர் ஆய்வு செய்துள்ளார். ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனை கிண்டிக்கு மாற்றப்பட இருப்பதாகவும், அந்தக் கட்டடம் மீண்டும் சட்டசபையாகவோ அல்லது சட்ட மேலவையாகவோ மாற்றி அமைக்கப்படும் என்றும் செய்திகள் வருகின்றன. இது வருத்தத்திற்கு உரியது. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் மக்கள் மனங்களில் எழுந்துள்ளது. எனவே, இந்த செய்தி உண்மையாக இருந்தால், முதல்வர் இதில் தலையிட்டு அதனை உடனடியாக நிறுத்த வேண்டும்' என கேட்டுக்கொண்டுள்ளார்.

# அறியாமையா விஷமத் தனமா?

தமிழ்நாடு பாரதீய கிசான் சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர், சி.எஸ் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'டெல்லி அருகில் நடைபெற்று வரும் வேளாண் சட்டத்துக்கு எதிரான விவசாய போராட்டத்தை முன்னெடுத்து வருபவர் ராகேஷ் திகாயத். 'பாரதிய கிசான் யூனியன்' என்ற அமைப்பின் தலைவரான அவர், டெல்லி போராட்டத்துக்கு ஆதரவு கோரி மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியை 09.06.2021 அன்று சந்தித்துள்ளார். தமிழ் நாளிதழ்களில் வெளிவந்த அதற்கான புகைப்பட விளக்கத்தில், பாரதிய கிசான் சங்கத்தின் தலைவர் ராகேஷ் திகாயத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான செய்தி. எங்கள் அமைப்பின் தலைவர்கள் யாரும் மமதா பானர்ஜியை சந்திக்கவில்லை.

ஹரியானாவில் சில மாநிலங்களின் விவசாய அமைப்புகளை ஒன்றிணைத்து முன்னாள் பிரதமர் சரண் சிங் தலைமையில் பாரதிய கிசான் யூனியன் தொடங்கப்பட்டது. நெருக்கடி காலத்தில் ஊழலுக்கு எதிராக போராடிய பாரதிய கிசான் யூனியன், பின்னர் பல பிரிவுகளாக உடைந்து, தற்போது ஹரியானா மாநில விவசாயத் தரகர்களின் பிடியில் சிக்கியுள்ளது. இந்த அமைப்பிற்கும் எங்களது பாரதீய கிசான் சங்கத்துக்கும் இடையே எந்தவித சம்மந்தமும் இல்லை.

தேசிய சிந்தனையாளர் ஸ்ரீ தத்தோபந்த் தெங்கடியால் 1979ல் தொடங்கப்பட்ட பாரதிய கிசான் சங்கம், பாரதம் முழுவதிலும் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. டெல்லியில் நடைபெற்று வரும் விவசாயத் தரகர்களின் போராட்டத்திற்கு நாங்கள் ஆதரவு அளிக்கவில்லை. மத்திய வேளாண் சட்டத்தின் சீர்திருத்தங்களை பாரதிய கிசான் சங்கம் நிபந்தனைகளுடன் வரவேற்றுள்ளது. மேற்கூறிய செய்தியில் பாரதிய கிசான் யூனியன் என்ற வார்த்தையுடன் டெல்லி போராட்டத்தில் எங்கள் அமைப்பைத் தொடர்புப்படுத்துவது விஷம வேலையாக இருக்குமோ என்றும் கருத வாய்ப்புள்ளது. இந்த விவகாரத்தில் தமிழ் ஊடகங்கள் விழிப்புணர்வுடன் செய்தி வெளியிட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்' என தெரிவித்துள்ளார்.

# பி.எம்.எஸ். மாநில அமைப்பாளர்




பாரதத்தின் மிகப்பெரிய தொழிற்சங்கமான பாரதிய மஸ்தூர் சங்கத்தின் தமிழக மாநில அமைப்புப் பொது செயலாளராக ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகரான பி. தங்கராஜ் பொறுப்பேற்றுள்ளார்.

# கையெழுத்து இயக்கம்

அனைவருக்கும் எளிதில் தடுப்பூசி கிடைத்திட ஏதுவாக உலக சுகாதார அமைப்பு தடுப்பூசிக்கு காப்புரிமையை கட்டாயப்படுத்தக்கூடாது என்பதை வலியுறுத்தி சுதேசி ஜாக்ரன் மஞ்ச் சார்பாக அகில பாரத அளவில் ஒரு கையெழுத்து இயக்கம் நடைபெற்று வருகிறது. நமது பாரதம் கடந்த அக்டோபர் முதல் இதனை வலியுறுத்தி வருகிறது. அதற்கு 120 நாடுகளின் ஆதரவு உண்டென்றாலும் உலக வர்த்தக அமைப்பு (WTO) காப்புரிமை விஷயத்தில் அமைதியாக இருப்பதால் தடுப்பூசி தயாரிப்பு தாமதமாகி வருகிறது. எனவே, இதற்கு ஆதரவு தரும் விதமாக, https://joinswadeshi.com/form2/ என்ற முகவரியில் இந்த டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தில் மக்கள் தங்கள் ஆதரவு கருத்தினை ஜூன் 13 முன்னதாக பதிவு செய்திட சுதேசி ஜாக்ரன் மஞ்ச் கேட்டுக்கொண்டுள்ளது.

# 2 டிஜி மருந்து தயாரிக்க அழைப்பு

மிதமானது முதல் சற்று தீவிர பாதிப்பு உள்ள கொரோனா நோயாளிகளுக்கு வழங்குவதற்காக, '2டிஜி' என்ற தடுப்பு மருந்தை ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பான டி.ஆர்.டி.ஓ உருவாக்கியுள்ளது. இந்த மருந்தை தற்போது அதிக அலவில் தயாரிக்க ஏதுவாக, மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கு, டி.ஆர்.டி.ஓ அழைப்பு விடுத்துள்ளது. 'இந்த மருந்தின் தொழில்நுட்ப தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படும். அதிகபட்சம் 15 நிறுவனங்களுக்கு, மருந்து தயாரிக்க 'லைசென்ஸ்' வழங்கப்படும். அந்த நிறுவனங்கள் மாதத்துக்கு, 2,000 கிலோ மருந்து தயாரிக்கும் திறனை கொண்டிருக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஆன்லைன் கல்வி வழிபாட்டு முறைகள்

கொரோனா ஊரடங்கால், பள்ளி, கல்லூரிகள் தற்போது இணையம் வழியாகவே நடைபெறுகின்றன. இந்த 'ஆன்லைன்' வகுப்புகளில் பல பள்ளிகளில் ஒரு சில ஆசிரியர்கள் தவறாக நடந்து கொண்டதாக சமீபத்தில் புகார்கள் எழுந்து சர்ச்சையாகியுள்ளது. இதையடுத்து, ஆன்லைன் வகுப்புகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை மாற்றி அமைக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக, பள்ளிக்கல்வி அலுவலர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆன்லைன் வழிகாட்டு முறைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவை, ஒவ்வொரு பள்ளிக்கும் விரைவில் அனுப்பப்படும். இந்த புதிய வழிகாட்டு நெறிமுறைகளில், மாணவர், மாணவியர், ஆசிரியர்கள், ஆசிரியைகள் என ஒவ்வொருவரும் எந்த வகையான உடைகளை அணிய வேண்டும், எப்படி பாடம் எடுக்க வேண்டும், குழுக்களில் இடம் பெறுவோர், கேமரா கோணங்களை சரியான முறையில் அமைப்பது குறித்த விவரங்கள் என பல பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

# ஊரடங்கில் அதிகரிக்கும் மணல் திருட்டு

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டை அடுத்த ஒதலவாடி கிராமத்தில் உள்ள செய்யாறு ஆற்றுப் படுகையில் அதிகாலையில் மணல் கடத்தலில் சிலர் ஈடுபட்டுள்ளதாக வருவாய்த்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து, சேத்துப்பட்டு வட்டாட்சியர், சேத்துப்பட்டு காவல் உதவி ஆய்வாளர் உள்ளிட்ட குழுவினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது, நரசிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு கும்பல் ஆற்றுப் படுகையில் மாட்டு வண்டிகளில் மணல் அள்ளிக்கொண்டிருந்தனர். அதிகாரிகள் வருவதை பார்த்ததும் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். அங்கு அதிகாரிகள் 6 மாட்டு வண்டிகளை பறிமுதல் செய்தனர். தப்பி ஓடியவர்கள் குறித்து காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



# மெக்ஸிகோ செல்லும் பாரதத்தின் வன நாயகன்



அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள பிரம்மபுத்திரா ஆற்றுப்படுகையில், தனி மனிதனாக ஒரு காட்டையே உருவாக்கியவர், 'இந்தியாவின் வன நாயகன்' என்றும் அழைக்கப்படும் பத்ம ஸ்ரீ விருது பெற்ற ஜாதவ் பயெங். இவர், தனது வாழ்நாளின் எவ்வித தன்னலமும் இன்றி 30 ஆண்டுகளை செலவிட்டு சுமார் 550 ஹெக்டேரில் 40 மில்லியன் மரங்களை நட்டு 'மொலை கதோனி' என்றழைக்கப்படும் அடர்த்தியான காட்டை உருவாக்கியுள்ளார். இந்த மொலை கதோனி, தற்போது புலிகள், யானைகள், மான், முயல்கள் உள்ளிட்ட பல பூர்வீக மற்றும் புலம்பெயர்ந்த உயிரினங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மரங்களின் இருப்பிடமாக உள்ளது. இவருக்கு வட அமெரிக்க நாடான மெக்சிகோ அரசு அழைப்பு விடுத்துள்ளது. அந்நாட்டை பசுமைக்குடிலாக மாற்றும் திட்டத்தில் கைக்கோர்த்துள்ள பேயங், சுமார் 8 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் சுமார் 7 மில்லியன் மரங்களை கொண்ட அடர்த்தியான காட்டை உருவாக்க மரங்களை நடவு செய்யவிருக்கிறார் இந்த வனமகன். இத்திட்டத்தை செயல்படுத்துவதில் அந்நாட்டைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் பேயங்குடன் இணையவுள்ளனர். வரும் செப்டம்பர் மாதம், இந்தியாவி லிருந்து பேயங் மெக்சிகோ புறப்பட வுள்ளார்.

# பாபா ராம்தேவுக்கு எதிராக ஐ.எம்.ஏ கடிதம்



இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.எம்.ஆர்) அமைப்பிடம் யோகா குரு பாபா ராம்தேவுக்கு எதிராக இந்திய மருத்துவ சங்கம் (ஐ.எம்.ஏ) புகார் கடிதம் கொடுத்துள்ளது. அதில், பாபா ராம்தேவ் அலோபதி மருத்துவத்தை களங்கப்படுத்துகிறார், அவதூறு பரப்புகிறார். கொரோனாவுக்கு எதிராக போராடும் மருத்துவர்களை அவமானப்படுத்துகிறார் என பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், ஐ.எம்.ஏ தலைவரான ஜெயலால், தன்னுடைய பதவியை மதமாற்றத்திற்கு பயன்படுத்துவது குறித்தோ, அவரை நீதிமன்றம் கண்டித்தது குறித்தோ, அவர் தன் பதவியை துஷ்பிரயோகம் செய்த காரனத்தினால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றோ அந்த கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில், ஐ.எம்.ஏ உறுப்பினரும் குஜராத்தைச் சேர்ந்த நீரிழிவு நிபுணருமான டாக்டர் ஜிதேந்திர நாகர், டாக்டர் ஜெயலால் மீதான குற்றச்சாட்டுகள் மிகவும் தீவிரமானவை என்றும், அனைத்து குற்றச்சாட்டுகளும் முழுமையாக விசாரிக்கப்படும் வரை அவரை அந்த பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

# பாரத வம்சாவளி மாணவருக்கு விருது

அமெரிக்காவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் (இ.பி.ஏ), ஆண்டுதோறும், சிறந்த சுற்றுச்சூழல் சார்ந்த இளம் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு சுற்றுச்சூழல் இளைஞர் விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இவ்வாண்டுக்கான விருது சோஹி சஞ்சய் படேல் என்ற இந்திய வம்சாவளி மாணவருக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. இவர், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பஞ்சுகளை உருவாக்கி உள்ளார். வீடுகளின் சுவர்களுக்கு பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த பஞ்சுகள், தீயை பரவ விடாமல் தடுக்கும் திறனுடையது.

# பொய் கூறும் பிரபல நடிகை

மேற்கு வங்கத்தின் மிகப்பிரபலமான நடிகையும் திருணமூல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நுஸ்ரத் ஜஹான், தன் கணவர் நிகில் ஜெயினுடனான திருமண உறவு முறிவு குறித்து இறுதியாக தனது மௌனத்தைக் கலைத்தார். அவர் வெளியிட்ட அறிக்கையில், 'நான் என் கணவரிடம் இருந்து நீண்ட காலத்திற்கு முன்பே பிரிந்துவிட்டேன். எங்களது திருமணம் துருக்கியில் சட்டப்படி செல்லுபடியாகாது. துருக்கிய விதிமுறைகளின்படி இது திருமணம் அல்லாத ஒரு உறவுமுறை மட்டுமே' என்றும் கூறியுள்ளார். மேலும், தனக்குத் தெரியாமல் தனது நகைகள், குடும்ப நகைகள், சொத்துக்கள், பணம் பல்வேறு கணக்குகளில் இருந்து சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளது எனவும் குற்றம் சாட்டியுள்ளார். அப்படியெனில், அவர் இந்திய அரசியல் அமைப்பின்படி சத்திய பிரமாணம் செய்து நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றது செல்லாது. சட்டத்தை ஏமாற்றியுள்ள அவர் மீது உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முன்னதாக இந்த நடிகை ஒரு புகைப்படக் காட்சிக்காக துர்கா தேவிபோல ஆடை அணிந்தார். அதனால் அவரை கொல்லப்போவதாக முஸ்லிம் பயங்கரவாதிகள் அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# தொழிலாளர்களுக்கு உதவிடும் உ.பி. அரசு

உத்தரபிரதேசத்தில் 23 லட்சம் தொழிலாளர்களுக்கு கொரோனா கால நிவாரணமாக ரூ.1,000 வீதம் மொத்தம் 230 கோடி அவர்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு கோடியே 65 லட்சத்து 31 ஆயிரம் தொழிலாளர் குடும்பத்தினருக்கு 20 கிலோ கோதுமை, 15 கிலோ அரிசி வழங்கப்பட்டது. இது தொடர்பான நிகழ்ச்சியில் ஐந்து தொழிலாளர்களுக்கு உதவித்தொகையை முதல்வர் யோகி ஆதித்யநாத் வழங்கி துவக்கிவைத்தார். மற்றவர்கள் அனைவருக்கும் நிவாரணத்தொகை வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது.



# ஜம்முவில் கட்டப்படும் பங்கர்கள்

மத்திய அரசு சில காலம் முன்னர் ஜம்மு பிராந்தியத்தில் உள்ள சர்வதேச எல்லையோரம் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு பயன்பாட்டிற்காக சுமார் 14,000 பங்கர்களை கட்ட உத்தரவு பிறப்பித்தது, பின்னர் கூடுதலாக 4,000 பங்கர்களை கட்டவும் உத்தரவு பிறப்பித்தது. இதனையடுத்து தற்போது சம்பாவில் 1,592, ஜம்முவில் 1,228, கத்துவாவில் 1,521, ரஜோவ்ரியில் 2,656, பூஞ்ச் பகுதியில் 926 என மொத்தமாக 7,923 பங்கர்களை கட்டி முடித்துள்ளதாக ஜம்மு காஷ்மீர் அரசு நிர்வாக செய்தி தொடர்பாளர் அறிவித்துள்ளார். மீதமுள்ள சுமார் 9,905 பங்கர்களின் கட்டுமான பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் படிப்படியாக அவை நிறைவு பெற்று செயல்பாட்டுக்கு வரும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ஆன்லைனில் 150 கோடி மோசடி

பெங்களூருவை தளமாகக் கொண்டு இயங்கும் பவர் பேங்க், சன் பேக்டரி, ஈ.இசட்.பிளான் ஆகிய மொபைல் ஆப்கள் பற்றி சமூக ஊடகங்களில் பல்வேறு புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இவற்றின் உண்மை சேவையகம் சீனாவை மையமாகக் கொண்டுள்ளது. அந்த ஆன்லைன் லோன் ஆப், மக்களை அதில் அதிக பணம் முதலீடு செய்ய ஆசை காட்டி, 5 லட்சத்துக்கும் அதிகமானோரிடம் இரண்டே மாதங்களில் இதுவரை ரூ.150 கோடிக்கு அதிகமாக பெற்று மோசடி செய்துள்ளது. புகாரையடுத்து அதனை கண்காணித்த டெல்லி காவல்துறையின் சைபர் குற்றத்தடுப்புப் பிரிவு, அதில் ஒரு தொகையை முதலீடு செய்து பண மோசடியைக் கண்டறிந்தனர். இதில் முதலில், ஜூன் 2ம் தேதி இதில் முதலில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஒருவர் பிடிபட்டார். அவரிடம் விசாரணை செய்ததில், மேலும் 10 பேர் சிக்கியுள்ளனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.



# கொரோனா பணியில் ரோபோக்கள்



கொரோனா நோயாளிகளைக் கவனித்துக் கொள்வதற்காக புதிய வகை ரோபோவை ஹாங்காங் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதற்கு அவர்கள் 'கிரேஸ்' எனப் பெயர் சூட்டியுள்ளனர். இந்த ரோபோ மனிதர்களின் உடல் வெப்பத்தை பரிசோதிப்பதோடு, தன் செயற்கை நுண்ணறிவுத் திறன் மூலம் நோயாளிகளின் பிரச்னைகளை அறியவும், முதியவர்கள், தனிமைப்படுத்தப் பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளும் வகையிலும் உருவாக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் மருத்துவர்கள், செவிலியர்களின் பணிச்சுமையை வெகுவாகக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.


# முஸ்லிம்களின் சட்டவிரோத குடியேற்றம்



உத்தரபிரதேசத்தின் காசியாபாத்தில், காவல்துறையின் பயங்கரவாத தடுப்புப் படை, நூர் ஆலம் மற்றும் அவரது உதவியாளர் அமீர் உசேன் ஆகியோரை அதிரடியாக கைது செய்தது. இவர்கள், மியான்மர் மற்றும் பங்களாதேஷில் இருந்து ரோஹிங்கியாக்களை சட்டவிரோதமாக அழைத்து வந்து அவர்களுக்கு பான் கார்டு, ஆதார், ரேஷன் கார்டுகள் மற்றும் சிம் கார்டுகள் போன்ற ஆவணங்களைப் பெற உதவி செய்தது விசாரணையில் தெரியவந்தது. ஆலமும் உசேனும் மியான்மரைச் சேர்ந்தவர்கள், பங்களாதேஷில் உள்ள நயபரா அகதிகள் முகாமில் வசித்து வந்தனர். ஆலம் சில ஆண்டுகளுக்கு முன்பு பாரதத்திற்கு வந்து மீரட்டில் குடியேறினான். கடந்த ஜனவரியில் அஜிஜுல்லா என்ற ரோஹிங்கியாவை காவல்துறை கைது செய்தது. அவனை விசாரித்ததில் கிடைத்த தகவலையடுத்து தற்போது இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மதம் மாறிய மகனின் மதவெறி

மத்திய பிரதேசத்தில் குவாலியரில் தரம் பிரதாப் சிங் என்பவர் டேவிட் என்ற கிறிஸ்தவராக மதம் மாறினார். அவரது தாய் ரோஜ் தேவியை மதம் மாற பலமுறை வற்புறுத்தியுள்ளார். ஆனால், தான் கடைசிவரை ஹிந்துவாகவே வாழ்வேன் என அந்தத்தாய் உறுதியாக இருந்தார். சில காலம் கழித்து இறந்துவிட்ட தன் தாய்க்கு அவரின் ஆசைப்படி ஹிந்து முறையின்படி தகனம் செய்ய டேவிட் மறுத்துவிட்டார். மேலும், தன் தாயை கிறிஸ்தவ முறைப்படிதான் அடக்கம் செய்வேன் என பிடிவாதம் பிடித்துள்ளார். இதனை அறிந்த சரோஜ் தேவியின் (மகளின் மகளான பேத்தி ஸ்வேதா சுமன், கொரோனா காரணமாக பல்வேறு பகுதிகளில் உள்ள பொதுமுடக்கக் காலத்திலும் தங்கள் மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்று ஜார்க்கண்டில் இருந்து 1100 கி.மீ தூரம் பயணித்து குவாலியர் வந்து தனது பாட்டியின் ஆசையை நிறைவேற்றும் விதமாக, ஹிந்து முறைப்படி அவரை தகனம் செய்துள்ளார். முன்னதாக, ஸ்வேதா, இதற்காக ஹிந்து ஜாக்ரான் மஞ்சின் உதவியை நாடியிருந்தார் என்பதும் அவர்கள் ஸ்வேதாவுக்கு உதவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# இதுதான் சீனாவின் குணம்

வரும் 2049க்குள் உலகின் மிக சக்திவாய்ந்த நாடாக மாறுவதை சீனா நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. அதற்காக சீனாவை ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சி (சி.சி.பி) எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளில் முக்கியமான ஒன்று திருட்டு. ஒவ்வொரு 10 மணி நேரத்திற்கும் சீனாவின் ஒரு தகவல் திருட்டு முயற்சியை அமெரிக்கா எதிர்கொள்கிறது என அந்நாட்டின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ தெரிவிக்கிறது. அமெரிக்க தொழில் நுட்பங்கள் பலவற்றை ஏற்கனவே திருடியுள்ள சீனா, தற்போது புதியதாக அமெரிக்காவில் திருட முயற்சிப்பது அதன் வேளாண்மை தொடர்பான அறிவுசார் சொத்துக்களைதான். சீனா இப்படி திருடுவது அமெரிக்காவில் மட்டுமல்ல பாரதம், இங்கிலாந்து என அனைத்து நாடுகளிடமும் அது தன் திருட்டு புத்தியை காட்டிக்கொண்டுதான் உள்ளது. இன்னும் சொல்லப்போனால், அதன் நட்பு நாடான ரஷ்யா, பாகிஸ்தானையும் அது விட்டுவைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'சீன கம்யூனிச அரசாங்கம் தனது இலக்குகளை அடைவதற்காக எதற்கும் துணியும், அதற்காக அது வெட்கப்படாது' என்கிற உண்மையை சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் முந்தைய பேச்சுகள் சுட்டிக்காட்டுகிறது. சமீப காலமாக, அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட மோ ஹைலோங், வெய்கியாங் ஜாங், ஹைட்டாவோ சியாங் உள்ளிட்ட சீன விஞ்ஞானிகளே இதற்கு சாட்சி. அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிபுணரும், பாதுகாப்புத் துறையின் சைபர் பாதுகாப்பு கொள்கை, வியூகம் மற்றும் சர்வதேச விவகாரங்களின் முன்னாள் இயக்குநருமான ஓய்வு பெற்ற கர்னல் ஜான் மில்ஸ், 'சீனாவின் திருட்டுகளில் இவை பனிப்பாறையின் முனை மட்டுமே. இவ்வளவு காலமாக, அமெரிக்கா, ரஷ்யா மீது



கவனம் செலுத்தி வந்தது. ஆனால், சீனாதான் உலகிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல், கடந்த 10 வருடங்களுக்கு மேல் சீனா இப்படி திருடி வருகிறது' என கூறியுள்ளார்.


## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006